Director of Land Reforms Department
30 SEP 2011
Chepauk, Chennai 600 005.

**சுருக்கம்**

நிலச்சீர்திருத்தம் – 2011–12 ஆம் ஆண்டு பகுதி II திட்டம் – நிலச்சீர்திருத்தத்துறை அலுவலகத்தில் 12 பிரிவுகளுக்கிடையே துறையிடை அகத்தொலைபேசி வசதி (Intercom Facilities) செய்தல் – ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [நி.சீ.1(2)]த்துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.307**

**நாள் 26.09.2011**

புரட்டாசி 9,

திருவள்ளுவர் ஆண்டு 2042

**படிக்கவும்:**

1. இயக்குநர், நிலச்சீர்திருத்தம் கடித எண்.A2/8658/2010(நி.சீ), நாள் 26.5.2011.
2. அரசு கடிதம் எண்.30180/நிதி (வரவு செலவு II)2011–1, நாள் 15.6.2011.

********

**ஆணை:**

2011–12 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் நில சீர்திருத்தத் துறை அலுவலகத்தின் 12 பிரிவுகளுக்கிடையே ரூ.1.20 இலட்சம் செலவில் துறையிடை அகத்தொலைபேசி வசதி (Intercom Facilities) செய்வதற்கு நில சீர்திருத்த இயக்குநர் அனுப்பியுள்ள செயற்குறிப்பிற்கு நிலைநிதிக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

2. அதன்படி 2011–12 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் நிலச்சீர்திருத்தத்துறை அலுவலகத்தின் 12 பிரிவுகளுக்கிடையே துறையிடை அகத்தொலைபேசி வசதி (Intercom Facilities) செய்வதற்கு ரூ.1.20 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது. இந்த 12 அகத்தொலைபேசி வசதி செய்வதற்கு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி வாங்கப்பட வேண்டும். தேவைப்படும் தொகையையே பயன்படுத்திக் கொண்டு மீதித்தொகை அரசு கணக்கில் செலுத்தப்படவேண்டும்.

3. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்.

3475 – 00 ஏனைய பொதுவான பொருளாதார பணிகள் 201 – நிலஉச்சவரம்பு (வேளாண்மை நிலம் நீங்கலாக) – I திட்டத்தில் சேராதது AD - நிலச்சீர்திருத்தத்துறை இயக்குநர் – தலைமையிடப் பணியாளர்கள் –19 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் (ந.தொ.கு.3475–00–201–AD-1919)

/த.பி.பா./

Verified @ RealEstate ™

4. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க நிலச்சீர்திருத்த இயக்குநர் அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தை இந்நிதியாண்டிற்குள் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்யப்பட வேண்டும் என்றும், இப்பணிகள் முடிவுற்றதற்கான முடிவுற்ற அறிக்கையை (Completion Report) அரசுக்கு அனுப்ப வேண்டும் என நிலச்சீர்திருத்த இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.48706-C/நிதி(வருவாய்)/2011, நாள் 22-09-2011 இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.ராஜகோபால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நிலச்சீர்திருத்த இயக்குநர், சென்னை-600 005
சம்பளக்கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை-600 005
மாநிலத்தலைமை கணக்காயர், சென்னை-600 018
மாநிலத்தலைமை கணக்காயர், (தணிக்கை) சென்னை-600 018
மாநிலத் தலைமை கணக்காயர், (CAS), சென்னை-600 009

நகல்
வருவாய் (வ.ந.3) துறை, சென்னை- 600 009
நிதி(வருவாய்/வரவு செலவு-II)/பொ.ப)த்துறை,சென்னை-600 009
இருப்பு கோப்பு/உபரி நகல்கள்

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

26/9/2011
பிரிவு அலுவலர்.

Verified RealEstate ™